இளங்கலை தமிழ்

வருடம் : 2018 - 2019 ஆம் ஆண்டு பருவம் : 6

பாடத்தலைப்பு - முதன்மைத்தாள் XII

சங்க இலக்கியம் - புறம்

பாடக்குறியீட்டு எண் : 18BTA62C

அலகு : 5

பெரும்பாணாற்றுப்படை முழுவதும்

தயார் செய்தவர் :

முனைவர். வெ. செல்வசுப்பிரமணியன்

தொடர்பு எண் : 9952621715

தமிழ்த்துறை.

அலகு: 5 18BTA62C

## பெரும்பாணாற்றுப்படை

தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்றுப் பசி மறந்த பாணன் ஒருவன், பரிதவிக்கும் இன்னொரு பாணனை அவனிடம் சென்று ஆற்றுப்படுத்துவது 'பெரும்பாணாற்றுப் படை' நூல் கூறும் செய்தி

'தொண்டைமான் - 'செவ்வரை நாடு' செல்லும் வழி, காட்டு வழிதான் என்றாலும், கள்வர் பயமில்லை. போகும் வழிகளில், வன விலங்குகள் சில உங்களை வருத்தாது. எதிர்ப்படுகின்ற முல்லை நில மக்களிடம், மருத நிலத்து ஊர்களில் வாழ்பவர்களிடம், நாங்கள் பாடிப் பரிசில் பெறும் பாணர்கள், தொண்டைமானை நாடிப் போகிறவர்கள் என்று சொன்னால் போதும்; போகும் இடமெல்லாம், உங்களுக்குப் பாலும், பால்சோறும், தேனும், தினையும் தின்னக் கிடைக்கும். பயமின்றிப் போகலாம்" என்று வழி கூறி அனுப்புகிறான். பரிசில் பெற்று வந்த பாணன்.

"மழை வீழ்ந்தன்ன மாத்தாள் கமுகு, வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்" - என்று வரும் வருணனைகள் இயற்கை அழகுடன் இனிய கவியின்பமும் தர அமைந்துள்ளன. ஒரு அரசன் தன்னை அண்டிப் பரிசில் பெற வந்தவர்க்கு "அருங்கடித் தீஞ்சுவை அமிழ்தொடு பிறவும், விருப்புடை மரபின் கரப்புடை அடிசில், மீன் பூத்தன்ன வான் கலம் பரப்பி, மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து, ஆனா விருப்பில் தானின்று ஊட்டி" அதாவது நிறைய உண்கலங்கள் பரப்பி, அதில் எல்லாம் அமுதம் போன்ற உணவு வகைகளைப் பரப்பி விட்டு, தாய் மகனுக்கு ஊட்டுவது போல 'உண்க'.... 'உண்க' என்று உபசரித்தான். ஊட்டி மகிழ்வித்தான் - என்ற சேதிகள் வெறும் செய்திகள் அல்ல. அரசர்களிடம் தமிழ் கூறும் புலவரும், பாணரும் பெற்றிருந்த ஏற்றம் பெருமை இவற்றிற்கு எடுத்துக் காட்டு, இந்த வர்ணனைகள் என்பதே பொருந்தும். தான் மட்டும் பரிசில் பெற்று மகிழ்ந்து விடுவதோடு அமையாது தன்னை ஒத்த பாணர் பிறரும் பரிசில் பெற வழி கூறுவதும், பெற்ற பெரும்பொருளைக் கொண்டு இரும்பேறாக்கவும் இனிதுற வாழ்ந்ததுமான வாழ்க்கை முறை - தமிழர் வாழ்வின் தலை அறம் என்று கொள்ளத்தக்கதல்லவா?

" அகல் இரு விசும்பின் பாய் இருள் பருகிப் .....
யாக்கைப் புலவு வாய்ப் பாண!
புல்லென்

(1 - 22)

விரிந்து பரந்த வானில் தோன்றுகிற சூரியச்சுடர் இருளை விழுங்கி, உலகில் ஒளி உண்டாக்கிப் பகலை வரக் காரணமாகிறது. அதே சூரியனின் வெப்பம் மிகுந்திருக்கும் வேனில் காலத்தில் - பச்சைப் பசுந்தளிர் உதிர்ந்து நிற்கும், பெரிய அடிமரம் உடைய பாதிரிப் பூ மரத்தின் அழகிய பெரிய இதழ்களைக் கொண்ட விண்டுகள் மொய்க்கின்ற பூவை இரண்டாகப் பிளந்தது போன்ற உட்பக்கம் உடைய, தோலினால் செய்த; பருத்த அடி உடைய பாக்குப்பறைப் பானையில் உள்ள கண்களைப் போன்ற துளை உடைய; இணைந்த வேறுபாடு தெரியாதபடி உருக்கி ஒன்றாய்ச் சேர்த்தது போன்ற போர்வையும் கொண்ட; நீர் வற்றிய சுனை, உள் இருண்டு இருப்பது போன்ற உட்பாகமும்; நாவில்லாத வாய்ப்பகுதியும்; (யாழ்த் தண்டில் அமைந்துள்ள வாய்ப்பகுதி - வாய்ப்பகுதிக்கு நாக்கு இல்லை - ஆதலால் வறு வாய் எனப்பட்டது. பிறை நிலவு போலப் பிளவுபட்ட பகுதியும்; வளை சேர்ந்த பெண்களின் முன்கையைப் போன்றவாக்கட்டும்; நீலமணி போலும் நீண்ட தண்டும்; பொன் உருக்கிச் செய்தது போன்ற நரம்புகளும், கொண்ட யாழை; இடப்பக்கம் ஒடுக்கிக் கொண்டு; வெப்பத்தால் சுடுகின்ற சூரியனும், சந்திரனும் சுற்றி வரும்; குளிர்ந்த நீர் நிறைந்த கடல் சூழ்ந்த; இந்த உலகில், தன்னையும் தன் சுற்றத்தாரையும் தாங்குவோர் இல்லாமையால், வெப்பத்தால் காய்ந்த நிலத்தில் உதிர்ந்த மழைத்துளிகளால் தளிர்த்த ஆலி, புகைபோலப் பரந்த மலைக்குன்றில் உள்ள பழுத்த பழமரங்களைத் தேடிப் போகும் பறவைகளைப் போல; ஓரிடத்தில் தங்கி நிலைக்காது, வறுமையால் வாடும் சுற்றத்தாருடன், தான் கற்ற கல்வியைத் தன் வறுமை காரணமாகத் தானே வெறுத்துப் பேசுகின்ற வாய் உடைய பாணனே!

## மூவேந்தரிலும் மேலானவன்

"பெருவறம் கூர்ந்த கானம் கல்லென ...., செல்வோ இரவல!
சிறக்க நின் உள்ளம். (43-45)

வறண்டு காய்ந்த காட்டில் கல் எனும் முழக்கத்தோடு பெரு மழை பெய்ததைப் போல, நீண்ட நாள் பசியால் வாடிய எம் சுற்றத்தார்க்கு ஈந்தனன்; அடுக்க அடுக்கக் குறைவுபடாத மிகப் பெரும் அளவில் பொன்னையும், பொருளையும், வெள்ளைப் பிடரிமயிர் உடைய குதிரைகளையும், வலிமை கொண்ட யானையையும், பரிசுப் பொருள்களாகக் கொண்டு. நாங்கள் இளந்திரையனுடைய ஊர்களிலிருந்து வாரிக் கொண்டு.

வருகிறோம். எனவே நீங்களும், இப்பெரிய நில உலகை ஈரடியால் அளந்தவனும், திருமகளை மார்பில் கொண்ட -வனுமான, நீலக்கடல் நிறம் கொண்ட திருமாலின் குலத் தோன்றலாய்; வழிவழி வந்த பெருமைக்குரியவன். நில உலக உயிர்களைக் காத்து வளர்ப்பதிலே தன்னிகரற்று முரசொலிக்கும் படை நடத்திப் பகை வென்றவன். சேர, சோழ பாண்டியர் என்னும் முடியுடைய மூவருக்குள்ளும்; பெரிய நீர்ப்பரப்புடைய கடலில் தோன்றுகின்ற சங்குகளிலே உயர்ந்ததென்று மதிக்கப்படும் வலம்புரிச் சங்கு போன்றவன். உயர்ந்த, மாசு மறுவற்ற குணநலன்கள் கொண்ட சிறப்பால் உயர்ந்தவன்; தீமைகளைப் போக்கி நல்லதே செய்யும் செங்கோல் ஆட்சி உடையவன். பல்வகை வேற்படை கொண்ட இளந்திரையன், இந்த இளந்திரையனிடம் நீங்கள் செல்வீர்களாயின், உங்கள் பசி பஞ்சம், வறுமைத் துயரமெல்லாம் கெட்டொழியும். இளந்திரையன் ஆளும் நாட்டு வளம் எப்படிப்பட்டது என்று சொல்கிறேன். கேள்! காட்டு வழியில் செல்கின்றவர்கள் பயந்து நடுங்க, அவர்களை அச்சுறுத்தி, அவர்கள் கைப்பொருள்களைக் கவர்ந்து வாழ்வதையே தொழிலாகக் கொண்ட, கொடிய கள்வர்கள் அவன் நாட்டில் இல்லை. வளம் மிக்க, காவலுடைய அவனுடைய பெரிய நாட்டில் இடிக்கும் இடி கூடத் துன்பம் தராது. நச்சு பாம்பு கூடப் பிறரைக் கொல்லாது. காட்டில் வாழும் கொடிய மிருகங்கள் கூட வருத்தம் தராத அமைதியான நாடு அவனுடையது. எனவே அவனுடைய நாட்டில் எங்கே வேண்டுமானாலும், எவ்வளவு நாள் தங்கி இருக்க விரும்புவீரோ அவ்வளவு நாள் அங்கே தங்கி வழிநடந்த வருத்தம் தீர, இளைப்பாறிச் செல்க! இரவலனே! உன் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைக.

<u>வாணிபம் சிறந்த வண்டிகள்</u>

"கொழுஞ் சூட்டு அருந்திய திருந்து நிலை ஆரத்து ....
பல் எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி" (46-65)

நல்ல மரத்தில் செதுக்கி எடுத்த வண்டிக் கால்களை, முழு மரத்திலே மத்தளம் போலக் கடைந்தெடுத்த குடத்தில்; நன்கு பொருத்தி, இருபக்கமும், குடத்திலே சேர்த்து அமைத்த சக்கரத்தோடு கூடிய, தோல் எழுப்பிக் கொண்டு செல்கின்ற வண்டியின் மேல்புறத்தை மழை மேகம் சூழ்ந்த மலைக்குன்று போலப், பின்னல் ஓலைப் பாய்களால் கூரை செய்து மூடுவார்கள். யானைகள் வந்து மேயாதிருக்கத் தினைப்புனம் காப்பவர் பரண்மேலே அமைத்துக் கொண்டிருக்கும் குடிசை போலத் தோன்றும். கோழிக்கூடு வண்டியின் முன்பக்கம் கூட்டில் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும்

இறவையின் முள்போல கொம்பில் இலை ஒத்த இரும் தரும் முதிர்ந்த பெண் யானையின் கால்போல் இருக்கும் துளை உடைய சிறு பறை. இவை அசைந்தாடப் பிணிக்கப்பட்டிருக்க நாடக மகளிர் ஆடும் நடனசாலையைப் உள்ள. வாரால் கட்டப்பட்ட இல்லமிசை முழங்கும் பறைபோல இருக்கும், கயிற்றினாலே இறுக்கிக் கட்டப்பட்ட உறிக்காய்ப்பானை முன்னே தொங்கிக் கொண்டிருக்க; பண்டத்தை; அதன் முன் அமர்ந்து, கையிலே குழந்தை ஏந்திய பெண்; வண்டியில் பூட்டிய எருதுகளை முதுகில் அடித்து விரட்டி ஓட்ட, தேன் சிந்தும் வெட்டமலர் நிறைந்த கிளைகளின் தளிர் இலைகளைக் கொண்டு தொடுத்த; இடைமாலை சூடிய பருத்த வலிய அழகிய தோளினையுடைய, உடல் வலிமை மிக்க நுகத்தடியில் சிறு துளையிட்டு ஒழுங்காகக் கட்டிய இருபுறமும் பலம் இடையக எருதுகள் பூட்டிய வண்டிதன் ஒதுங்கி தவறாமல் செல்ல - பாரம் சாயாமல் பார்த்துக் கொள்ள; உடன் பாதுகாத்துச் செல்லும் - உப்பு வணிகர்; உணவில் ஒரு சிறிய அளவே பயன்படுத்தப்படும் உப்பைக் கொள்ளை விலை கூறி விற்பர். இப்படிப்பட்ட எருதுகள் பல உடைய உப்பு வணிகர், நாள் தோறும் நடமாடும் நெடுவழி உடையது, இளந்திரையன் இருக்கும் ஊர்:

வில்லொடு நிற்கும் வீரர்கள் (66 - 81)

"எல்லிடைக் கழியுநர்க்கு ஏமம் ஆக.... உல்குடைப் பெருவழி கவலை காக்கும்"

மக்கள் பொழுதில் வழி நடப்பவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக, மக்கள் பொருளில் வழி நடப்பவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக, மலையிலும், காட்டிலும் விளைகின்ற மக்களுக்குப் பயன்படும் பல உயர்ந்த பொருட்களை, திருடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கின்ற முயற்சி, மிக உடையவர்களும்; அத மறைக்கும் செருப்பைக் காலிலே மாட்டிக் கொண்டு; உடலிலே சட்டை அணிந்து, வழிப்பறிக் கள்வர்கள் எய்யும் அம்புகளைத் தடுக்கும் ஆற்றல் உடையவர்களாயிருப்பதால்; அந்த அம்புகள் தைத்த காயம் இல்லாத மார்புடையவர்களாக இருப்பிலே வரிந்து கட்டிய அரைப்பட்டையிலே, யானைத் தந்தக் கைப்பிடி உடைய வாளைச் செருகி மன்றாடு பக்கம், மலையிலே உள்ளின்ற பாம்பு போலத் தொங்குகின்ற உடைவாள் இடையிலே தொங்க, இடுப்பைச் சுற்றிக் கட்டிய அழகிய ஆடைகள் உடையவர்களும், வில்லேந்திய அகன்ற வலிய தோள்களும்; கடம்ப மரம் அமர்ந்த கண்ணுதல் முருகனைப் போல, பகை மீட்கும் வேலேந்திய கை உடைய, எதிர்ப்பவர் முன் புறமுதுகிடாத அரிய

வீரர்களும் போரில் பிடிக்கின்ற கேடயம் போன்ற பலாப்
பழத்தின் திரள் சுளை போல, கொத்துக் குலை உடைய-
மிளகு மூட்டைகளைச் சுமந்து சுமந்து தழும்பேறிய
போன முதுகும், நிமிர்ந்த காதுகளும் உடைய கழுதைத்
சாத்துடன் செல்லும் வணிகர்கள் பலர் வழிநடந்து
செல்லும் சுங்கம் வசூலிக்கும் இடங்களைக் கொண்ட
நீண்ட நெடு வழிகளையும் காணலாம்.

பாணருக்குப் பல்சுவை விருந்து:

" வில்லுடை வைப்பின் வியன் காட்டு இயவின் ....
பைதீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவிர்.
(82 - 105) வழி நடந்து செல்பவர்களுக்கு எவ்விதத்
துன்பமும் நேராது காக்கின்ற, வில் படை உடைய
வீரர்கள் இருக்கும், அகன்ற காட்டு வழிகளில்; உயர்ந்த
இலவமரத்தின் அசைகின்ற கிளைகளில், உள்ள
பசுங்காய்கள் மேல்பகுதி பருத்து விரிந்து பஞ்சு வெளித்
தெரிவது போலுள்ள முதுகுப்புறம் கொண்ட அணிலும்,
எலியும் வெளியே திரியா. (காரணம் பாலைநில
மக்களின் வீட்டுச் சுவர்கள், ஈஞ்ச முள்ளை போலுள்ள
ஈச்ச மரத்தின் கூரிய முள்ளையோடு கூடிய இலைகளால்
வேயப்பட்டிருப்பதால், அணிலும் எலியும் அதில் ஏறிச்
செல்வது அவற்றிற்கு ஆபத்து என்பதால் அவை அங்கே
வெளியே திரிவதில்லை என்னும் கருத்துப்பட 'திரியா'
என்றார். ஆற்றின் கருமணலைப் போன்ற முதுகும்
தழைத்த தலை இலைகளும் உடைய, மேட்டு
நிலத்திலே இருக்கிற ஈச்ச மரத்தின்; வேல் போலும்
கூரிய முள் முனை கொண்ட இலைகளால் வேய்ந்த
முள்ளம் பன்றியின் முதுகு போல் இருக்கும் குடிசையில்
மான் தோலையே படுக்கையாகக் கொண்டு, அப்போது
தான் பிள்ளை பெற்ற எயிற்றி (எயினருக்குப்
பெண்பால் எயிற்றியர். இவர்கள் பாலை நில மக்கள்)
படுத்திருக்க, வீட்டில் உள்ள மற்றவர்கள், வலிய-
வயிரம் பாய்ந்த திரண்ட கோல் நுனியில் செருகப்பட்ட
உளி போலும் வாயுடைய தோண்டு கருவியால்,
மண்ணைக் கீழ் மேலாகக் கிளறித் தோண்டி, கரம்பு
நிலத்துப் புழுதியை நீக்கி வாரிக் கொண்டு வந்த,
வெண் பற்களை உடைய எயிற்றியர் விலங்கு
பரக்கப் பரக்கப் பருத்துப்பட்ட மான் கட்டப்பட்டிருக்கும்
பருத்த அடிப்பாகம் உடைய விளாமரத்தின் நிழல்
கவிந்திருக்கும், வீட்டு முற்றத்தில், தரை நிலத்தில்
குழி போல தோண்டி உண்டாக்கிய நில உரலில்
போட்டு, சிறு உலக்கையாலே குற்றிக் கொழிக்காது

எடுத்த அந்தப் புல்லரிசியை; ஆழமான கிணற்றில் சிறிதே ஊறும் உப்பு நீரைக் கொண்டுவந்து, வாயுடைந்த மிடைய பானையில் ஊற்றிக் கொதிக்க வைத்து, நிலவே கிடக்கு, மூளியான அடுப்பிலே வைத்துச் சோறாக்கி, உலர்ந்து காய்ந்த இறைச்சியோடு (உப்புக்கண்டம் அல்லது கருவாடு) உண்பர். அவர்கள் தலைவன், வாடாத தும்பை மலர் மாலை அணிந்த, வீரர்களின் தலைவன். போரில் புறமுதுகிடாத வீரனும், வெள்ளைப்பட்டமைந்த வீரக் கழல்கள் அணிந்த கால்களையுடைய மனைநாதன். அவனிடம் நீங்கள் போய் நாங்கள் பாணர் குலத்தவர் என்று சொன்னால் போதும், உடனே அவன் தெய்வங்களுக்கு பலி உணவு இடுவது போலக் குவிந்த தேக்கிலையில் இட்டு வைத்து அந்த உணவை, உங்கள் நெடுநாள் பசிதீரத் தருவான். நீங்கள் உங்கள் சுற்றத்தாருடன் அது பெற்று மகிழ்வீர்களாக.

## வேடுவர் வாழும் கானம் (106 - 117)

"மான் அடி பொறித்த மயங்கு அதர் மருங்கில் ......
அகன்சுரம் இறந்த அம்பர் ...."

நீரைத் தேடி அலையும் மான்களின் காற்குளம்புகள் அழுந்தப் பதிந்த சுவடுகள் உள்ள காட்டுவழி. அங்கு வானமழை பொய்த்த காலத்தில் நீர் பெறுவதற்காகத் தோண்டிய குளம். அந்தக் குளத்தருகே தெளிந்த நீர் வெள்ளமாய் பாய்ந்த சிறு சிறு குழிகள். அந்தக் குழிகளை மறைந்து கொண்டு, குளத்திலே நீர் உண்ண வரும் அகத்திப் பூப் போன்ற வளைந்த கொம்புடைய காட்டுப்பன்றிகளை வேட்டையாடக் காத்திருக்கும் கானவர்கள். முற்பகல் எல்லாம் இப்படிப் பன்றி வேட்டையாடிய அவர்கள், பிற்பகல் பொழுதில், முள்ளுடைய தாளுடனே கூர்த்த தாமரை மலரின் நீண்ட புற இதழ் போலும் காதுடைய குறுமுயல்கள் தப்பி ஓடிப் போகாதபடி, நெருக்கமான வேலிகளுக்கு இடையே வலைகளைக் கட்டி முயல் வேட்டை ஆடுவார்கள். திறந்த வாயுடைய வேட்டை நாய்களுடன் சென்று, முயல்கள் தங்கியிருக்கும் பசும்புல் - செடிப் புதர்களை அனைத்துக் கலைப்பார்கள். எதற்கும் அஞ்சாத அந்தக் கானவர் - பாலை நிலமக்கள் - காட்டிலே கொள்ளை அடித்து வாழ்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் வாழும் இடமாகப்பட்ட காட்டு வழியைக் கடந்து சென்றால் அதற்கப்பால் ....'
(புதர்களில் பதுங்கியுள்ள முயல்கள் வெளியேற அதை அடைப்பது, வேட்டை நாயை விடுவது, பிறகு முடக்கிப் பிடிப்பது இவை வேடர் தொழில்

## பசி அறுவீர் பாலை நிலத்தில்

"பரிந்துபட ஒன்னாத் தெவ்வர் நடுங்க ஓச்சி ... வரைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்! (118-133)

பருந்துகள் வட்டமிடும், உள்ளன உண்பதற்காக, தம்மோடு மாறுபடும் பகைவர்கள் அச்சி நடுங்க, அவர்கள் மேல் ஓயாது எறிந்து முனை மழுங்கின - கூரான, புலால் நாற்றமும் வீசும் வேல்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஓசை தரும் மணிகள் கட்டிய கிடுகுப் பலகையிலே வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும். தலைப்பகுதியிலே நாணை முடைந்த வில்கள், ஒரு பக்கம் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும். இத்தகைய வீடுகள் நிறைந்த நகரினையும் ஊகம் புல் கொண்டு வேய்ந்த, உயர்நிலை மாட மதிலையும், மணித்தேன் கூட்டைப் போன்ற அற உடைய அம்புக் கட்டுகளும் ஓசையுடன் ஒலிக்கும் துடிப்பறை கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும். திரண்ட காலுடைய பந்தலின்பும் சங்கிலியால் கட்டிய நாய்கள் இருப்பதால், நெருங்க முடியாத காவலும் உடைய வீடுகளையும் வளரும் முள் செடிகளாலான வேலியும், அதைச் சூழ்ந்த காவல் காடும், வளைந்த இளைய மரம் கூட்டிய இடைக்கதவும், உயர்ந்து பருத்த, கூரிய முனை உடைய கழுமரங்கள் வரிசையாக நட்டு வைக்கப்பட்டிருக்கும் வாசலினையும் கொண்ட; கொடிய வில்லேந்திய பாலை நிலமக்கள் வாழும் குடியிருப்புக்குப் போய்ச் சேருங்கள். நீங்கள் அப்படி அங்கு போய்ச் சேர்ந்த உடன், களர் நிலத்திலே விளைந்த ஈச்ச மரத்தின் நுண் விதை போன்ற, மேட்டு நிலத்தில் பயிரான சிவந்த நெல்லரிசியால் ஆக்கிய சோற்றை; நாய் கடித்துக் கொண்டு வந்த, மணிபோல முட்டையிடும் உடும்பின், பொரியலொடு சூடு; வீடுகள் தோறும் உண்ணத் தருவார்கள். நீங்கள் அதைப் பெற்று உண்டு மகிழுங்கள்.

## வீர மறவர் வாழ்விடம்.

"யானை தாக்கினும் அரவு மேல் செலினும் .... முரண்தலை கழிந்த பின்றை மறிய (134-147)

யானையே நேர் எதிரே வந்து தாக்கினாலும் பாம்பு கடிக்க வந்தாலும், நீல நிற வானத்து இடி இடித்து முழங்கினாலும் கருவுற்ற மறவர்குலப் பெண்கள் அஞ்சமாட்டார்கள். இத்தகைய எதற்கும் அஞ்சாத வீர பாரம்பரியத்தையும், தங்கள் உடல் வலிமை கொண்டு, கொள்ளை அடித்துண்ணும் உணவு முறையையும் கொண்ட குகைப்பிறந்த புலிக்குட்டியைப் போன்ற - இளந்தாடியோடு கூடிய இளைய வீரர் வேட்டை நாய் தான் குறிவைத்த விலங்கின் மீது தப்பாது பாய்ந்து பாருவது போல, கொடிய வில் ஏந்திய தன்

சொல் கேளாத பகைவர்களின் காவலுடைய இடத்தை அடைந்து, அவர்களுடைய பசுக்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு வந்து, அதையும் கள்ளுக்கு விலையாகப் பேசி விற்று விட்டு (இது போதாதென்று) வீட்டுக்கு வந்தாலும், கள்களிலேயே இனியதான தோப்பி என்னும் நெல்லால் செய்த கள்ளையும் குடித்து; வளம் உடைய மன்றத்திலே உள்ள வலிமை மிக்க காளையைக் கொன்று அறுத்துத் தின்று, தோலை மடித்துப் போர்த்திய மத்தளம் இடையிடையே முழங்க; வில் தாங்கும் இடதுபக்கத் தோளை வலதுபக்கமாக வளைத்துப் பகல் பொழுதெல்லாம் விளையாடி மகிழும், தளர்வில்லாத மறவர்கள் வாழும் இடங்களையும் கடந்து சென்றால்....

<u>பாலும் சோறும் காவலர் தருவர்</u>

" குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பைச் ....
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர் " (148-168)

குட்டை ஆடுகள் நின்றபடி தழை மேய்வதற்குத் தோதாக, வெட்டி வந்த தழைகளைக் கட்டி, வைத்திருக்கும் குட்டைக் கால்களையுடைய தாழ்வாரம் உள்ள குடிசை. அதற்கு மூங்கில் படலால் ஆன கதவு. அதைச் சுற்றிக் கிடக்கும் மிளார்கள். வரகுப் பயிர்களின் தாள் — வைக்கோலைக் கொண்டு மூங்கில் கழிகளின் மேலே கூரை அமைத்து, அந்த வீட்டுக்குள்ளே தோலை விரித்து அதையே படுக்கையாக்கிக் கொண்டு இடையர் முதுமகன் இருக்கின்ற காவலுடைய, ஆடுமாடுகள் கட்ட நீண்ட கயிற்றோடு கூடிய, சிறு முளை அடித்த முற்றத்தையும், வளைந்த முதுகுடைய செம்மறி ஆட்டுடன், வெள்ளாடும் சேர்ந்திருக்கும், காட்டு முள்ளால் ஆன வேலிகள் சூழ்ந்த, எருக்குப்பை நிறைந்த வீடுகளும் மிகுந்த அந்த ஊரில்; இருள் கழிந்து, பொழுது விடியப் போகிற புலர்காலைப் பொழுதில்; பறவைகள் இரை தேடப் புறப்படுகின்ற காலை வேளையில், புலி உறுமுவது போல ஒலிக்க அணைகயிற்றை இழுத்து வாங்கி, குடைக் காளானுடைய வெள்ளை மொட்டுக்களைப் போல், குமிழிகள் உடைய, நன்கு உறைந்து, இறுகிய இனிய தயிரைக் கடைவார்கள். இப்படி ஆய்ச்சியர்கள் தயிரைக் கடைந்து எடுத்த வெண்ணெயை, தயிர் கடையும் போது தெறித்த மோர்த்துளிகள் படிந்திருக்கும் வாயுடைய பானையை, அழகிய சும்மாடுடன் கூடிய தலையில் வைத்து, காலையில் தலைசுமந்து மோரை வேறு பொருள்களுக்குப் பண்டமாற்றாக விற்கின்ற —

நல்ல அழகிய நிறமுடைய மேனியும், சிறிய மகரக் குழை அணிந்த காதும், மூங்கில் போன்ற தோளும், அழகிய சிறு நெற்றியும், அதனுடன் அமைந்த நீண்ட கருங்கூந்தலும் உடைய ஆய்மகள்; பண்ட மாற்றாக வந்த மோருக்குப் பெற்ற நெல்லைக் கொண்டு வந்து சோறாக்கித் தன்னுடைய சுற்றத்தார்களை உண்பிக்கச் செய்வாள். பின்பு வெண்ணெய் உருக்கிய பெற்ற நெய்க்குப் பண்ட மாற்றாக, பொன் கட்டிகளைப் பெற விரும்பாமல், பால் தரும் எருமை, நல்ல பசுக்கள், கரிய எருமைக் கன்றுகள் வாங்குவாள்; பாலைக் குடித்து, நாக்கை மடித்துச் சீழ்க்கை (சீட்டி) ஒலி எழுப்பும் கோவலர்கள் - இடையர்கள் குடியிருக்கும் முல்லை நிலத்தை அடைவீர்களேயானால், நண்டின் சிறுகுஞ்சுக் கூட்டம் போன்ற தினை அரிசிச் சோற்றைப் பாலொடு கலந்து கொடுப்பார்கள். நீங்களும் பெற்று உண்டு மகிழுங்கள்.

## குழல் ஊதும் கோவலர்

" தொடு தோல் மரீஇய வடு ஆழ் நோன் அடி ....
புல் ஆர் வியன் புலம் போகி" (169-184)

தொடுதோல் - அதாவது தொடுகின்ற தோல் - அது செருப்பு. கால் செருப்பை அதிகம் கழற்றாமல் காலிலேயே போட்டுக் கொண்டிருப்பதால், அந்தச் செருப்பு வார் அழுந்தின தழும்போடு கூடிய வலிமை மிக்க கால்-களையும், மாடுகளை மடக்கி ஓட்டவும், அவைக-ளுக்குத் தழை ஒடித்துப் போடவும் எப்போதும் கையில் தொரட்டிக் கத்தியோடு கூடிய கம்பைப் பிடித்திருப்பதால், அந்தக் கம்பு அழுந்திக் காய்ப்பேறிய வலுவான கைகளையும்; நீண்ட கழிகளின் இருபக்கமும் தயிர், பால் பானைகள் உறியிலே கட்டித் தொங்கவிடப் பட்டிருக்க, அந்தக் காவடி போன்ற நீண்ட கழியை தூக்கி சுமப்பதால், அது அழுந்தித் தழும்பேறிய, முடி உடைய தோள்களையும்; பலரும் விரும்பி உண்ணும் பால் பொருட்களைப் பலருக்கும் வழங்க அடிக்கடி கையில் எடுப்பதால், அந்தப் பால் பிசுக்கேறிய கைகளை உடல்மேலே தடவிக் கொள்வதால் - பால் மணம் வீசும் முடைக் காற்றையும் காட்டிலே வளர்ந்த உயர்ந்த மரங்களின் கிளைகளிலும், கொடிகளிலும் பூத்த பலவகையான மலர்களாலும், தழைகளாலும் ஆன கதம்பமாலை ஆகிறது; ஒற்றை ஆடையை சிறு துண்டை,

இடையிலே அணிந்து - மேலும் உணவு கொள்கின்ற இடையன்
தன்னுடைய பசுக்கள் கன்றுகள் கூட்டத்தோடு, காட்டிலே
தங்கி இருக்கின்றான் இடையன். அதுமட்டுமல்லாமல் மெல்லியதாக
ஆம்பல் இலை தோன்றும் படியும், தனது கைத்திறமை கொண்டு
அரணிக் கட்டையைக் கடைந்து உண்டாக்கிய, செந்நிற
தீயைக் கொண்டு; துளையிடப்பட்ட புல்லாங்குழலில்,
பாலைப் பண்பாடுவதை வெறுத்து, குமிழமரக் கொம்பைக்
குழி போலக் குடைந்து, மரல் நாரை நரம்பாகக் கட்டிய
வில்போல வளைந்த வில்யாழில், விரல் வைத்து மீட்டிக்
குறிஞ்சிப் பண் பாடுவான். இப்படி அவன் பாடும்
குறிஞ்சிப் பண்ணினை பல்காலுடைய (ஆறுகால்) வண்டி
-னங்கள் - தும்பிகள், தம்முடைய இனம் எழுப்பும்
ரீங்கார ஓசை - இது என்று கேட்டு மயங்கும்.
இத்தகைய வளமிக்க, புல் வளம் நிறைந்த அகன்ற முல்லை
நிலமாகிய காட்டுப் பகுதியைக் கடந்து சென்றால்

## முற்றம் முற்றாக் கொட்டிய தானியம்.

"... இன் உருத்து எழு காடு ஓங்கிய தொடு உழை
வரைப்பின் ..." இன்சுவை மூரல் பெறுகுவிர். (185-196)

குடில்கள் சூழ்ந்திருக்கும், ஓங்கி வளர்ந்த புதர்க்காடுகள்.
அதன் அருகே மாடுகள் அடைக்கும் பட்டித் தொழுவம்
இருக்கும். தொழுவத்தின் குறுகிய பெண் யானைகள்
கூட்டமாக நிற்பது போலத் தோன்றும் வரகு, தினை
முதலிய தானியங்களைக் கொட்டி வைக்கும் குதிர்கள்
இருக்கும் முற்றத்தையும், யானையின் கால் போல இருந்து
வரகு இடிக்கின்ற உரல்கள் வைத்த பந்தலையும்,
இறுகிய சட்டம் உடைய உருளைகள் உள்ள வண்டிச்
சக்கரங்களையும், சிக்கலான அம்பை சாத்தி வைக்கத் தேய்ந்த
சுவர்களையும், புகை மண்டிய கொட்டகைகளையும்,
பருவ காலத்தில் மேகம் கருத்துத் திரண்டு வானத்தில் இருந்து
பெய்கின்ற கனத்த மழை மேகத்தைப் போன்ற, கரிய
நிறமுள்ள வரகுத்தாள் வைக்கோல் கொண்டு வேயப்பட்ட
கூரைகளுடைய வீடுகளும், குடியிருப்பும் கொண்ட
ஊர்களையும் காண்பீர்கள். அங்கே அந்த ஊர்களில்
நீண்ட கொத்துடைய தினைப் பூப்போன்ற சிறு தாளுடைய
வரகின் அரிசிச் சோற்றை, கொத்துக் கொத்தாக மலரும்
அழகிய நிறமுடைய வெள்ளைப் பூவைப் போன்ற
அவரைப் பருப்புடன் மிகச் சேர்த்துப் படைக்கும்
இனிய சுவை உடைய உணவைத் தருவார்கள்.

நீங்கள் அதையும் பெற்று உண்டு மகிழுங்கள்.

## காடை வாழும் காடு

நாஞ்சில் குடி நிறை வல்சிச் செஞ்சால் உழவர்...... முடி நாஞ்சில் அழுத்திய நெடுநீர்ச் செறுவில் (197 - 212) இந்த ஊர்களுக்கு அப்பால் சென்றால், நிறைந்த குடியிருப்புகள் கொண்ட உணவுக்குக் காரணமான உழவுத்தொழிலைச் செய்கின்ற உழவர் பெருமக்கள் வாழ்கின்ற மருத நிலத்தை அடைவீர்கள். சிறந்ததாகிய சால் கொண்டு நிலத்தை உழுகின்ற உழவுத் தொழிலைச் செய்பவர்கள் அவர்கள். நல்ல நடை உடைய உழவு மாடுகளை நுகத்தடியில் பூட்டிப் பெண் யானையின் வாயைப் போன்ற, வளைந்த வாயுடைய ; கலப்பையில் பொருந்திய உடும்பின் முகம் போன்ற பெரிய கொழு நிலத்திலே, மறைய அழுத்தி ஆழமாக நிலத்தை உழுகின்ற உழவர்கள் உழுத நிலத்திலே விதை தெளிப்பார்கள். பயிர் விளைந்த நிலத்தில், பயிரோடு கூட வளர்ந்த களையை களைக் கொட்டால், வெட்டிக் களைந்து எறிந்து, பின்னர் அறுவடைக் காலத்தில் விளை நிலத்தை அடையும் போது, பயிர் அறுப்பவர்கள் செய்யும் ஆரவாரத்துக்குப் பயந்து, நிலை தடுமாறி, அழகிய வெண் கடம்ப மரத்தின் வாசமுடைய பூவைப் போன்ற பறந்தோட முடியாத சிறிய குஞ்சுகளைத் தழுவிக் கொண்டு, குட்டைக் காலையும், கரிய கழுத்தினையும் உடைய காடை, காட்டிலேயே தங்கி விடும் நிலப்பரப்பைக் கடந்து செல்லுங்கள். கடந்து சென்றால்,

வெள்ளிய தோலால் ஆன துருத்தியை அமுக்கி ஊதி, உலை நெருப்பில் இரும்பைக் காய்ச்சும் கொல்லன் உலைக் களத்தில் உள்ள, முறிந்து போன கொறடு என்றும் கருவியை ஒத்த, முதிர்ந்த காயுடைய நன்கு தோன்றிய வினை முடிவுற, பசுங்கோரைப் புல்லைக் குத்தி எடுத்த, மண் ஒட்டிக் கொண்டிருக்கின்ற கொம்புகளுடன் கூடிய பெரிய காளை எருதுகள் தங்களுக்குள் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்கின்ற அகன்ற வயல்களில், முன்னமேயே உழுது நீர் பாய்ச்சி விட்டதால், மீண்டும் உழத் தேவையில்லாத சேறு பட்ட வயல்களில், உழவர்கள் சேற்றை மிதித்துப் பரம்படித்துச் சமம் செய்ய, கூழ் நடுவதற்குத் தயாராக உள்ள நெல் நாற்றுக் கட்டுகள், கத்தையாகக் கிடக்கின்ற நீர் வளம் மிக்க நடு

வயல்களைக் காண்பீர்கள்.

## கோரைப்புல் கோத்த முள்ளி.

"களைஞர் தந்த கணைக்கால் நெய்தல்... நீங்கா யாணர் வாங்கு கதிர்க் கழனி (213-228) வயல்களில், களை பறிப்பவர்கள் பறித்துப் போட்ட திரண்ட காம்புகளையுடைய, தேன் சிந்தும் நெய்தல் பூவை வெறுத்து; கொம்புகளில் முள்ளுடைய, அரும்புகள் சூழ்ந்த இதழுடைய முள்ளிப் பூவை, மடிப்புள்ள வாயும், சுருங்கிய காலும் உடைய உழவர் பறித்துக் கொண்டு, அங்கே விளைந்த கோரைப் புல்லைப் பல்லாலே கடித்து எடுத்த நாரைக் கொண்டு அதை அழகிய மாலையாக்கி, ஈர் உடைய தங்கள் கரிய தலை நிறையச் சூடிக் கொள்வர். பொன்னை உரைத்து மாற்றுக் காண உள்ள உரைகல் போலச் சாணமிட்டு காய உள்ள பூந்தாது படிவதால் பொன்போலப் பளபளக்கும் மார்பும்; இரும்பை அடித்துத் தகடாக்கியது போன்ற, சுருக்கம் இல்லாத மெல்லிய உடல்மேல் தோலும் உடைய, கைத்தொழில் வல்லவர்களின் செல்லப் பிள்ளைகள்; சோற்றுருண்டையை வெறுத்து ஓடும். பழைய அரிய வைக்கோல் கொண்டு வேய்ந்த, மேட்டு நிலத்தில் குடிசையின் முற்றத்தில்; அவரை உரலிலே போட்டு இடிக்கும், உலக்கையின் ஓசை மிகுந்து கேட்பதால், பக்கத்தில் இருக்கிற வளைந்த மடலுடைய கிளிகள் தங்களுக்கு ஏதோ ஆபத்து (பனை) வரப் போகிறது என்று பயந்து நடுங்கும். புதுவருவாய் உடைய, நிறைய நெற்கதிர் விளையும் வயல்கள் சூழ்ந்த மருதநிலப் பகுதி அது.

செம்பொன் மலைபோல செந்நெல் குவியல்

"கடுப்பனைப் பாவைச் சாதி அன்ன..... தண்பணை தழீஇய தளரா இருக்கை (229-242) அந்த மருத நிலத்து வயல்களில்; கடுக்கும் வலி உண்டாக்கக் கொட்டும் குளவிக் கூட்டம் போல விளைந்த முற்றிய நெல்லின் பசுந்தாளை அறுத்த உழவர்கள் பாம்புகள் கிடக்கும் மருத மரத்தின் உயர்ந்த கிளைகளின் கீழ் நிழலில், அங்கே வாழ்கின்ற தெய்வங்களுக்கும் படைப்பதற்காக, நெற்களத்திலே கொண்டு வந்து போட்டுப் போராகக் குவிப்பார்கள். தங்களுடைய சுற்றத்தார் கூட்டத்துடன், கூடி நின்று, கைகோர்த்து துணங்கைக் கூத்தாடும் அழகிய முற்றம், தழு

வெண்டுகிலை உடுத்திக் கொண்டிருப்பது போலக், குவிந்துள்ள நெற்போரின் மேலே, படர்ந்திருக்கும் சிவந்த பின்னிய வலையை நீக்கிவிட்டு, உழவர்கள் போர்களைப் பிரித்து எடுத்துப் பரப்பி, உழவு மாடுகளை விட்டுப் போரடித்து, நெல்லையும், பதரையும், சாவியையும், வைக்கோலையும் தனித்தனியாகப் பிரித்துத் தூற்றி எடுத்த நெல்லை ஏற்றம் போல உயரவைத்து எடுக்க, சேர்ந்த நெற்குவியல் மேலே காற்றாலே தூற்றின பதர் போத வடதிசையில் உள்ள மேருமலை போலக் குவிந்திருக்கும். இத்தகைய வளர்ந்துயர்ந்த குடியிருப்புகளைக் கொண்டது மருதநிலம்.

## பசி அறியா வாழ்க்கை

" பகடுதேர் ஆ ஈன்ற கொடு நடைக் குழவிக் .... மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர். (243 - 256)

அந்த மருத நிலத்திலே, பெரிய பசுக்கள் ஈன்ற, தளர்ந்த நடை உடைய கன்றுகளைக் கட்ட நீண்ட கயிறுகளுடன் சேர்த்துக் கட்டப்பட்ட கிளைகள், கட்டுமன் ஒரு பக்கம் நடப்பட்டிருக்கும் பெண்டாற்குள்ளே ஏணிக்கு எட்டமுடியாத உயரத்தில் நீண்டு அகன்ற உள்ளிடம் உடைய, தலைப்புறம் திறந்து உள்ளே கைபட்டு வைக்கப்பட்ட, பலவகையான விதைகளை உடைய அழியாத இளமை மாறாமல் என்றும் ஒரே மாதிரி இருக்கின்ற குதிர்கள் நிறைந்து இருக்கின்ற உயர்ந்து விளங்கும் வீடுகளையும், தச்சுத் தொழில் செய்வோர் வீட்டுப் பிள்ளைகள், செய்த விளையாட்டுத் (சிறுதேர்) தேரை உருட்டி விளையாடும் சிறுவர்கள் தாம் ஆடவிளையாடிய வருத்தம் தீர, பால் மார்புடைய செவிலித் தாயர்களைத் தழுவிக் கொண்டு நிறையப் பால் குடித்து கட்டில் படுக்கையில் படுத்துத் தூங்கும் அழகிய வீடுகளையும், பசி அறியாத இல்லங்களையும், கொண்ட மருதநில ஊரிலே சென்று தங்குங்கள். அப்படித் தங்கினால் சோம்பல் இல்லாத மருதநில இளைஞர்கள் கொண்டு வந்து " ஒரு சேர்த்த, வெள்ளை நிற நெல் சோற்றை வீட்டில் வளரும் மனைக் கோழியின் பொரியலுடன் உண்ணத் தருவார்கள். நீங்களும் பெற்று மகிழ்வீர்கள்.

## கால் நடந்த களைப்புத் தீர கரும்புச்சாறு

(257 - 274) பொருள் - மணநீர் அருவியாகக் குதித்தோடி விளையாடும் நெய்தல் மடை பொழியும், தேங்கிய நீர் நிறைய வளரும் மணல் தொடர்களில், வருத்தும்

யாளி வந்து தாக்க, பயந்த யானைக் கூட்டம் எல்லாம் ஒன்றாகக் கூடி வருந்தி அழைப்பது போல கரும்பு ஆட்டும் யந்திரங்களின் ஓயாத பேரிரைச்சல், கரும்பஞ்சாறு காய்ச்ச மூட்டிய தீயால் எழும் புகை, இவை சூழ்ந்திருக்கும் கரும்பு ஆலைக் கூடங்கள் தோறும் சென்று இனிய கரும்பஞ்சாற்றை விரும்பிப் பருகுங்கள்

பருகியபடி வழி நடந்தால், கொறுக்காந்தட்டைக் கால்களை ஊன்றி, பட்டை நீக்கிய புன்னை மரக் குச்சிகளைப் பரப்பி, அவற்றைத் தாழை நாரால் கட்டி, தருப்பைப் புல் வேய்ந்த கூரை உடைய சிறு குடிசைகள் இருக்கும். அங்கே, முற்றத்தில் மீன் வாரும் சால்கள் நிறைந்திருக்க, வளைந்த அடிமரம் உடைய புன்னை மரத்தின் கொம்புகளைக் கொண்டு அசைத்த பசிய காய்கள் தொங்கும், கீழே வெண் மணல் பரப்பிய பந்தலின் கீழே இளையவர் முதியவர் எல்லாம் ஒன்று திரண்டிருப்பார்கள். பிறகு இவர்கள் இளம்பிறை போல, புலால் நாற்றம் வீசும் அம்பையும் வில்லையும் போல, சிவந்த வரிகளுடைய கெண்டை மீனும், இறால் மீனும் விழுந்து புரளும் ஆழமான நீருடைய குளக்கரைக்குத் தம் மக்களுடன் செல்வார்கள். சென்றவர்கள் கோடை நீண்டு, வெப்பம் மிகுந்தாலும், நீர் நிலை குறையாத உடைகளை மேலே தூக்கி செருகி, நீரின் ஆழத்தைக் காட்டும் அளவுக்கு நீர் நிறைந்த அந்தக் குளத்தின் கரையில் காத்திருப்பார்கள். இப்படிப்பட்ட - கொடுமையான முடிச்சுக்களை உடைய வலைவீசி மீன் பிடிக்கும் தொழில் உடைய வலைஞர் குடி இருப்புகளில் சென்று தங்குங்கள்.

பந்தலின் கீழே கூடியிருந்தவர்கள், இளம்பிறைப் போலக் குளக்கரையிலும் காத்திருப்பது - ஊர் எல்லாம் திரண்டு வந்த பிறகே மீன் பிடிப்பர்; தனியாக எவரும் மீன் பிடிக்கப் போவதில்லை என்பதை உணர்த்துகிறது.

<u>வருத்தம் தீர்க்க</u> <u>வலைஞர் இல்லில்</u>

"அவையா அரிசி அம் களித் துழவை ... தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர் (275 - 282)

அப்படித் தங்கி இருக்கிறபோது வலைஞர் குடியிருப்புகளில், குற்ற முடியாத நொய் அரிசியைக் கொண்டு சமையலர்கள் சமைத்த சுவையுள்ள உணவை, அகன்ற வாயுடைய, முடைந்த தட்டிலே ஊற்றி, ஆறவிட்டு, பாம்புப் புற்றிலே இருக்கும் புற்றாஞ் சோற்றைப்

போலிருக்கின்ற, வெள்ளிய நல்ல இறால் முளையை சுவை உண்டாக்கக் கலந்து, காலை, மாலை ஆகிய இருவேளை-யும் அரிக்காமல், வலிய வாய் உடைய சாடியில் நாற்றம் போக ஊற்றி வைப்பார்கள். அது முற்றிய பின் விரல் வைத்து அரித்து எடுப்பார்கள். இப்படிக் கூடிய கள்ளை, சுட்ட பச்சை மீனோடு உண்ணத் தருவார்கள். நீங்களும் அதை உண்டு, வழி நடந்த களைப்புத் தீர இளைப்பாறுங்கள்.

தூண்டிலில் சிக்காது துள்ளியோடும் மீன்
"பசுந்துணர் பெய்த கவல் பிணி பைந்தோல் ...... பெருநாள் அமையத்துப் பிணையினிர் கழிமின்" (283-296)
பச்சை இறைச்சித் துண்டுகளாகிய இரை உள்ள தோலை தோளிலே தொங்க, மீன் பிடிப்பதிலே தேர்ந்த பாணர் மக்கள், இருந்துக் கட்டிய நீண்ட மூங்கில் கழியிலான தூண்டில் கயிற்றைக் கட்டிப் பின் அதன் நுனியில் உள்ள தூண்டில் முள்ளில் கோர்த்திருந்த இரையைக் கவ்விக் கொண்டு (தூண்டிலில் சிக்காது) தூண்டில் முள்ளைத் (இரையில்லாமல்) தனியே கிடக்கும் படி விட்ட (அதில் கோர்த்த இரையைத் தந்திரமாகக் கவ்விக் கொண்ட) சிறந்த வாயுடைய வாளை மீன், நீரிலே இருக்கும் பிரம்புக் கொடி காற்றிலே ஆட அதன் நிழல் நீரில் அசைவதைக் கண்டு, அதையும் தூண்டில் என நினைத்துப் பயந்து ஓடும்; நீர் நிறைந்த பெரிய குளத்திலே, தண்ணீரே தீப்பற்றிக் கொண்டதோ என்று எண்ணும்படி, குளம் நிறையப் பூத்த திருமகள் வாழும் தாமரைப் பூ பறித்துச் சூடிக் கொள்வதை விட்டுவிட்டு, மழை பொழியும் போது, அகன்ற பரந்த ஆகாயத்தில் தோன்றும் வானவில்லைப் போல, செவ்வரக்கு நிறமொத்த செங்குவளைப் பூவும், நீலோற்பல மலரும், ஒன்றுக்கொன்று நிறம் வேறுபடும் வேறுசில பூக்களும் மலர்கின்ற நீர் நிறைந்த பொய்கை-களில் மலர் பறிப்பவர்கள் உங்களுக்காக விட்டு வைத்துள்ள, அரும்பவிழும் மலர்களை, நல்ல காலைப் பொழுதிலே சூடிக்கொண்டு மேலும் செல்லுங்கள்.

மழைக் காலத்தில் பல வண்ண நிறமுடைய வானவில் ஆகாயத்தில் தோன்றுவது போல, தரையில் பல வண்ண மலர் பூத்த குளம் - தோன்றுவதாகக் கூறும் கவிநயம் சுவையுடையது.

## வேதம் ஓதும் கிளிகள்.

" செழுங்கன்று யாத்த சிறுதாள் பந்தர் ...... தகை
மாண் காழையின் வகைபடப் பெறுகுவிர்
(297-310) நான் சிறக்கச் சூடிய மலர்களோடு உங்கள்
பயணத்தை நீங்கள் மேலும் தொடர்ந்தால் நன்கு
வளர்ந்த, வளப்பம் உடைய கன்றுகளைக் கட்டியிருக்கும்,
சிறு கால்களையுடைய பந்தலையும், புதிய சாணம் இட்டு
மெழுகிய வீடுகளையும், வழிபடும் தெய்வங்கள் இருக்கும்
இடங்களையும், நாயும் கோழியும் வீட்டிலேயே
வளர்க்கப்படுவதானாலும், அவை சென்று சேராமல் தனித்
தனியே விட்டு வைத்திருக்கும் பகுதிகளையும், வளைந்த
வாயுடைய கிளிகள் வீட்டில் உள்ளவர் ஓதும் வேதமொழி
கேட்டுத்தானும் அதைக் கூறும், அருமை உடைய வேத
நூல் காக்கும் அந்தணர் வாழும் குடியிருப்பை
அடைவீர்கள்.

விரிந்து பரந்த வானத்தின் வடதிசையிலே தோன்றும்
சிறிய அருந்ததி நட்சத்திரம் போன்ற கற்பும், அழகிய
சிறு நெற்றியும், வளையணிந்த கையும் உடைய
அந்தணர் குலப்பெண், பக்குவம் அறிந்து சமைத்து
சூரியன் மறைகின்ற நேரத்தில்; இராசான்னம் என்னும்
உயர்ந்த நெல்லரிசியாலான அந்த உணவை, உயர்ந்த பசு
மோரில் எடுத்த வெண்ணெயிலே, மாதுளங்காயின்
துண்டுகளை மிளகுப் பொடி கலந்து, கறிவேப்பிலையைக்
கிள்ளிப் போட்டு வதக்கி; ஓங்கி உயர்ந்த மாமரத்தின்
பசுங்கொத்துக்களில் காய்த்த மாவடு ஊறுகாயுடன் வித
விதமாகப் படைக்க உண்டு மகிழ்வீர்கள்.

கற்புடைமையால் அருந்ததி வானில் ஒளிரும்
நட்சத்திரம் ஆனாள். உயர்ந்த கற்புக்கு உதாரணமாக
அருந்ததியைக் கூறுவது மரபு.

## கடற்றுறையா கலங்கரை விளக்கமா?

" வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇ ... கோழ்
உடை நல் இல் " (311-327)
உடன் விளையாடும் தோழியர்களுடன் நீர் உண்ணும்
துறையிலே நீராடி மகிழும் போது தா(வ)ழ விட்டுவிட்ட
பொன்னால் செய்த மகரக் குழைகளை, இரை தேடி
வரும் நீலமணி போன்ற சிச்சிலிப் பறவைகள்,
தாங்கிருக்கான இரை மீன் என்று எண்ணி எடுத்துக்கொண்டு

பறந்து போகும். அப்படிப் போகின்ற அவை, மாற்ற பறவைகள் தாங்கி இருக்கின்ற பனை மர மடலில் இரவில் சென்று தங்காது; கல்வி கேள்விகளில் சிறந்த அந்தணர்கள் செய்து முடித்த யாகத்தில் நட்ட, வேள்வித் தூணின் மேலே போய் அமரும். இப்படி அந்தப் பறவைகள் உயர்ந்த தூண் மேல் இருக்க, அதனிடமுள்ள மகளிர் காதணியில் பதித்த கற்கள், சோணகரின் அன்னப் பறவை வடிவிலான கலங்கரை விளக்குப் போலவும், வானில் உயர்ந்து விளங்கும், விடியற்கால பொழுதைக் குறிக்கத் தோன்றும் விடிவெள்ளி போலவும் விட்டு விட்டு ஒளிவீசும்; அந்த ஊரில், நீருடைய நதியின் பெயரையே தன் பெயராகக் கொண்ட நாடுவரை போய் (நீருடைய நதியின் பெயர்-இருந்து. இதைத் தன் பெயராகக் கொண்ட நாடு சிந்து தேசம்) பால்போலும் நிறமுடைய ஒளிக்கீடம், வெள்ளைப் பிடரிமயிர் அசைந்தாடும் வடக்கே உள்ள தேசத்தில் இருந்து வருகிற பொருள்களை ஏற்றி வரும் மரக்கலங்கள் நிறைந்திருக்கும், கடலோரத் துறைமுகங்-களையும், மாடம் ஓங்கிய, மணல் நிறைந்த, வேற்று நாட்டவர் வசிக்கும் தெருக்களையும், பலவகை வாணிபம் செய்யும், வணிகர்கள் வசிக்கும் வீதிகளையும், தெருவில் செம்மோர் காத்து நிற்கும் உயர்ந்த மதில்களை உடைய பண்டக சாலைகளையும், நெல்லைப் பெற உழவுக்கு உதவும், உழவுமாடுகளையும், பால்தரும் கறவை மாடுகளையும் ஆட்டுக் கிடாயும், ஆடும், நாயும், சுற்றித் திரிகின்ற சோறளிக்கும் நல்ல வீடுகளையும். நீங்கள் செல்லும் வழி நெடுகக் காணலாம்.

## பொன் கழங்காடும் பூவையர்.

... கொடும் பூண் மகளிர் கொன்றை மென் சினைப் பனி தவழ்பவை போல ... தொண்டிநினைத் திறையொடு சுவர் நறவு பெறுகுவீர் (328-345) நீங்கள் காணும் அதே வீடுகளில் அழகிய அணிமணிகளைப் பூண்ட பெண் மணிகள்; கொன்றை கிளையில் பனிநீர் படர்ந்தது போல், பசுமணிகள் கோத்த முத்து வடமணிந்த இடையில், மெல்லிய ஆடை அசை; உயர்ந்த மனைகளின் சாரல்களில் ஆனந்தக் கூத்தாடும் தோகை மயில்கள் போல, காலில் அணிந்த பொன் வளையல்கள் அசைய, மெத்து மெத்தென்று மெதுவாக இருக்கும் முத்தைப் போன்ற வெண்மணலில் பொன்னால் செய்த கழற்சிக் காயைக் கொண்டு பெண்கள் கழங்காடியும் மகிழும் இடங்கள் நிறைந்த பட்டணத்தில் சிறிதே தங்கி இளைப்பாறிக் கொள்ளுங்கள். பிறகு மேலே பயணம் தொடங்குங்கள்.

தடையின்றி

தொடர்ந்தால், பசுங்கொத்துகள் அசைந்தாடும், பல நீர் தடையின்றிப் பருகின்ற, பாதல் உடைய கள் விற்கும்

இடம் வரும். அங்கே பூமலர்கள் சிந்திக் கிடக்கும் முற்றத்தில், கள் சமைக்கும் பெண்கள் உண்ணும் வட்டில்களை ஓயாது கழுவுவதால், வருகின்ற நீர் குளம்பு போல் பரந்து சேறாகி, ஏராளமான அச்சேற்றில் பல குட்டிகளைப் போட்ட, கருத்த மயிர் உடைய ஆண் பன்றி கிடந்து புரளும். இந்த ஆண் பன்றியைப் பெண் பன்றியுடன் சேரவிடாது, அந்தச் சேற்றுக் குழியிலேயே வைத்து, நெல்லை அரைத்து மாவாக்கிய உணவையே தின்னக் கொடுத்தும் பல நாள் பாதுகாத்து வருவார்கள். இப்படிப்பட்ட பல நாள் பாதுகாத்த குட்டைக் காலுடைய அந்த ஆண் பன்றியைப் பின்னொரு நாள் கொன்று அதன் கொழுத்த தசையை உணவாக்கி, வெறியூட்டும் கள்ளுடன் தருவார்கள். பெற்று மகிழுங்கள்

கள் விற்கும் இடங்களில் கொடி கட்டுதலும், பூத்தூவுதலும் வழக்கமாயிருந்தன அன்று.

பெண் பன்றியோடு சேராத ஆண் பன்றியின் கொழுப்பே சுவையுடையது என்பதால் இறைச்சிக்காகக் கொல்ல உள்ள ஆண் பன்றியைப் பெண் பன்றியோடு சேர விடுவ-தில்லை.

<u>வானுக்கு ஏணியாக வைத்த மாடம்</u>

"வானம் ஊன்றிய மதலை போல .... குளைப்புற முதிர் கிழங்கு ஆர்குவிர்; (346- 362) பட்டணத்தைக் கடந்து சென்றால், நீல வானத்துக்கு முட்டுக் கொடுக்க நிறுத்திய ஊன்று கோல் போல் ஏணி சாத்தி, ஏறுவதற்கு வழி செய்தது போல் - அமைந்த வானம் தொடக் கட்டியது போன்ற மேற்கூரை வேயாத மாடத்தில், நிலா மாடத்தில், இராக் காலத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் விளக்கு, உப்புக் கடல் நீரில் ஓடுகின்ற மரக்கலங்களை (தாங்கள் சேர வேண்டிய கரை இது தான்; தெரியாது கலங்களை விளக்கும் என்று மரக்கலங்கள் மயங்கி வருக, வருக, நீங்கள் சேர வேண்டிய துறை இதுதான் என்று கூவி அழைக்கும் நீர்த்துறைகளைக் கடந்து போனால், யாழும் காயும், மலை போன்ற தோற்றமும் சொரசொரப் -பான உடலும் உடைய யானையைப் போன்ற வளமான நீண்ட அழகிய இலைகளைக் கொண்ட, தென்னை மரத்தின் உலர்ந்த கீற்றுக்களைக் கொண்டு வேய்ந்த, மஞ்சள் இருக்கும் முற்றத்தையும், மணம் வீசும் மலர் பூக்கும் தோட்டங்களையும் கொண்ட குளிர்ச்சியான சோலைகள் சூழ்ந்த உழவர்களின் உயர்ந்த குடியிருப்புகளில் -

வீடுகளில் தங்கினால், அங்கு தாழ்ந்த குலைகள் கொண்ட கிளைகள் நிறைந்த பெரிய பலா :த்தையும், விழுதில்லாத தாழை – (விழுதுடைய தாழை – நெய்தல் நிலத் தாழம்பூ. எனவே தென்னை விழுது இல்லாத தாழை எனப்பட்டது) தென்னை மரத்தின் இளங்காய் – இளநீரையும், இரட்டையான மார்புடைய பெண் யானையின் கன்னத்தில் தோன்றிய மருப்பு போலத் தாழ்ந்து கனி கொடுக்கும் – முற்றின வாழையின் வெள்ளைப் பழங்களையும், பருத்த அடி உடைய பனைமரத்தின் இளநுங்கோடு இன்னும் பல பண்டங்களையும் தின்று மகிழ்க. இவை வெறுத்துப் போனால் சேம்பினுடைய, முளை அற்றியுள்ள முதிர்ந்த கிழங்குகளை உண்க.

---

## மழை போல் கமுக மரம்

"... பகற்பெயல் மழை வீழ்ந்தன்ன மாத் தாள் கமுகின் ......
நீடல் தாழ் வார் மணல் நீர் முகத்து உறைப்ப,

(363-379) பகல் பொழுதில் மழை பொழிந்து வீழ்வதைப் போன்ற தண்டுடைய பாக்கு மரங்களும், அதன் பக்கத்தே உள்ள தென்னை மரங்களின் மூன்று முடைப்புடைய உள்ள தேங்காய்கள், வழி நடந்து செல்வோர், தங்களை வருத்தும் பசித்தீர சமைக்கின்ற சோற்றுப் பானை சரிய விழுகின்ற, செல்வவளம் மிக்க பாக்கத்தையும், பலமரச் சோலைகளையும் கடந்து போய், நல்ல நகர்களில் உள்ள விண் முட்டும் மாடங்களையும், மதில் சுவர் சூழ்ந்த வள்ளிக் கூத்தாடும் மக்கள் இருக்கும் வளம் மிக்க புறநகர்ப் புறங்களையும் கடந்தால்,

நீண்ட பூங்கொத்துக்களை உடைய காந்தள் பூக்கும் மலையில் யானை படுத்துக் கிடப்பதைப் போல

பாம்பாகிய படுக்கையில் துயிலுகின்ற திருமாலும்
இருக்குமிடத்தில்; வெயில் நுழைய இடமில்லாத
அளவு தழை மரம் அமர்ந்த இளமரச் சோலையில்
குயில்கள் நுழைந்து தங்கும். அந்தச் சோலையில்,
குடலைக் காயுடைய காஞ்சிர மரத்தைச் சுற்றிப்
படர்ந்த நீண்ட கொடியில் பூக்கும் பசும் இலைகள்
கொண்ட, புறத்தே வரிகளுடைய வெள்ளைக் குருக்கத்திப்
பூக்கள் வெண்மணல் பரப்பில் நீர் நிழலில் - நீர் ஊறிய
குழிகளில் உதிர்ந்து கிடக்கும். இது கரிய சட்டியிலே
பாகுடன் சேர்த்து அப்ப வணிகர்சுட்ட பணியாரம்
கிடப்பது போல இருக்கும். இப்படிப்பட்ட வளமான சோலை
வளம் சூழ்ந்த இடங்களைக் கடந்து சென்றால் -

இது பூலோக சுவர்க்கம்

முனைகால் கழிகிய பொழில்தொறும் திரள்காய்......
கருங்கோட்டு இனர் இயம் இயக்கினிர் கழிமின்''.
(380-392)

மழைநீர் பெருகி ஓடக் கழுவியது போலத் தூய்மையாக
அடிமரப்பகுதி இருக்கும் சோலைகள் தோறும், பருத்த
அடிமரம் இருக்கும் பாக்குமரத்தின் கழு கருவுற்ற
வயிறு போல இருக்கும் குழிந்த பச்சை மடல்களில்,
வார்த்த கள்ளைக் குடித்து அதைக் காலிபண்ணிவிட்டு,
அன்றாடம் மகிழ்ச்சி குறையாமல், உற்சாகத்துடன்;
சிறிதாக வளைந்த பிறைச்சந்திரனை (ராகு என்றும்)
பாம்பு (கிரகணகாலத்தில்) பற்றியிருப்பது போல, மகரமீனின்
வாய் போன்ற நெற்றிச் சுட்டி சூடிய அழகிய நெற்றியும்
நறவம் பூவைப் பெயர்த்து எடுத்து வைத்தது போன்ற
கரிய (தேனூற்றி வைத்தது போல் காண்பவர்க்கு
இனிமை தரும் கண் என்றும் சொல்லலாம்) கண் கரும்,
கொண்ட இளம் பெண்களுடன், பகல் பொழுதெல்லாம்
விளையாடி, பொழுதற்கு அரியதான, பெரும் பேறுடைய
சுவர்க்க வாழ்வைப் பழிக்கின்ற சுகத்தை; குறைவற்ற
வளமான வாழ்வை - பூக்கள் நிறைந்து மலர்ந்த,
சோலைகள் தோறும் போய் அனுபவித்து மகிழும்
மக்களுடன்; நீங்களும் சென்று இளைப்பாறிக்
கொண்டு, அங்குள்ள வரம் தரும் வல்லமை கொண்ட
தெய்வக் கடவுளர்களை வாழ்த்திக் கரிய தண்டுடைய,
இனிய யாழை இயக்கிச், சிறந்த இன்னிசை பாடுங்கள்,
மிகுதி அவ்விடம் விட்டுப் பயணத்தை மேலும்
தொடருங்கள்.

## அலைவாய் நகருக்கேகுதல்

" காழோர் இகழ் பதம் நோக்கிக் கீழ நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம் .. என்று தொடங்கிய நெடுநகர் வரைப்பின்" (391-405) தொடர்ந்தால்,

குத்துக் கோல் - அங்குசம் கொண்ட யானைப் பாகர் சற்று அயர்ந்திருக்கும் சமயம் பார்த்து, நீண்டு தொங்குகிற கழுத்தினை உடைய யானைக்கு வைத்த, நெய்யாலான சோற்றுருண்டையை, நிறை கருப்பமாக உள்ள பெண் குரங்கு, கவர்ந்து சென்று தங்கும் சோலையையும், யானைகளின் கிளை அடங்க, அவைகளைக் கட்டி வைக்க நட்ட, கட்டுத்தறி அமைத்த இடங்களையும் காண்பீர்கள். அடுத்து, பெரிய தேர்கள் ஓயாது ஓடுவதால் குழி வாய்ந்த - பள்ளமான தெருக்களையும், போரில் தோல்வி என்பதையே அறியாத, வீரம் மிக்க பெரும் புகழின் எல்லை கண்ட வீரர் - மறவர்கள் வாழும் குடியிருப்புகளையும், பொருட்களை விற்பவர் வாங்குவோர், கொடுப்பவர்கள் கைவலம் தருபவர் வாழும் அலைவாய் நெருங்கியதுடைய வாசல்களையும், காவல் அரண் அமைந்த இடங்களையும் நீல நிறம் கொண்ட நெடிய திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய நான்முகன் - பிரமன் இருக்கும் பல இதழுடைய தாமரை மொட்டைப் போலக் காண்பவர் மகிழத் தெருவும்; சுட்ட மண் - செங்கலால் கட்டிய நீண்ட மதிலையும் கொண்ட நகரைச் சேர்வீர்கள்.

வழங்குநர்க்குத் தருகின்ற அலைவாய் பெரியவாசல் - தான் ஒருபோதும் வந்தவர்க்கெல்லாம் வேண்டுமட்டும் கொடுத்து வருவதால், வீரர் கொடை கொடுக்கக் குறையாது தந்த இவ்வுடைய அலைவாய் வாசல் என்றழைப்ப.

## காஞ்சித் தலைவன்

" இழும் என் புள்ளின் ஈண்டு கிளைத் தொழுதிக் ... கச்சியோனே கைவண் தோன்றல்" (406-420) அந்த நகர் இழுமென்கிற ஓசை எழுப்பிப் பாத்திருக்கின்ற பறவைக் கூட்டம் போய் தங்கும் சோலைகளில் அமர்ந்து தழைத்த கிளைகளுள்ள மரங்களுக்குள்ளே, பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் பல உண்டு என்றாலும்; தனது இனிமையான பழச்சுவையால், பலாமரமே மேலானது என்று சிறப்புறும். அதைப் போலவே, மீன் நட்சத்திரங்களை கடல் சூழ்ந்த - விரிந்து பரந்த வானத்தையே கூரையாகக் கொண்டு, அகன்ற இந்த உலகத்தில் உள்ள; மற்ற எல்லா ஊர்களையும் விட விழாச் சிறப்பு மிகப் பொலியும் பழம் பெருமையும் மிக்கது, இந்த ஊர் - காஞ்சி, இங்கே தான்;

அந்திமாலை பொழுதைக் கறுத்துத் திரண்ட கார்மேகம் அழகிய தன் தலையில் நிலவைப் பிறையைச் சூடிக் கொண்டிருப்பது போல, வெண் தந்தக் கோடுடைய கருத்த பெரிய யானை போலவே மழைய போலவே பெருக்கெடுத்தோடிய இரத்த ஆறு அதை கிழித்துக் கொண்டு போகும்படி நடந்த பாரதப் போரில், நூற்றுவரான துரியோதனாதியர்கள் மடிய; போரிலே வெற்றி பெற்ற, கொடுஞ்சியோடு கூடிய தேர்ப்படை கொண்ட பஞ்சபாண்டவர் - தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்றும் ஐவரும் - போல, தனக்கு அடங்காது, தன்னோடு போரிட வந்த, பகைவர்களைப் போரிலே தோற்கடித்து வெற்றி கண்டு, ஆர்ப்பரித்தெழுந்த வள்ளன்மையும், வலிமையும் வாய்ந்த இளந்திரையன் - காஞ்சித் தலைவன் அவன் காஞ்சியிலே இருக்கிறான்.

மறைந்திடாத ஞாயிறும், கறுத்து இருண்ட வானம், கொம்புடைய கருத்த பெரிய யானைக்கு ஒப்பானது.

## அண்டியவரை ஆதரிப்பான்; அல்லாதவரைத் தண்டிப்பான்

"நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய .... செம்மாப்பார்க்கும் செழுநகர் முற்றத்து (421-435) காஞ்சியோனாகிய இளந்திரையன், அவனை விரும்பி வந்தவர்களுக்குப் பாதுகாவலனாக ஆதரவும் அளிப்பான். அவனை எதிர்ப்பவர்கள் என்றால் அவர்களுக்கு அவன் எமன் ஆவான். அவனை எதிர்த்துப் போரிட வந்தவர்கள் தேசமும் மக்களும் பாழ்பட்டுப் போகும். அவனுடைய தயவை வேண்டியவர்கள் தேசம் பொன்போல் மிளிரும். அவனை நண்பனாகக் கொள்ள வேண்டி நயந்து வந்தவர்களும், பகை வெல்ல வலிமையற்று துணை வேண்டி வந்தவர்களும்; கல் என்ற ஒலியோடு வீழ்கின்ற மலை அருவி, வரும் வழியில் உள்ள பல பொருட்களை வாரிக் கொண்டு கடல் நோக்கி ஓடுவது போல், பலவகைத் திறைகளைக் காணிக்கையாகத் தந்து அவனைக் காணுவதற்கு ஏற்ற தருணத்தை எதிர்பார்த்து; வானவர்கள் வாழும் உயர்ந்த இமயமலையில் வெள்ளிப் பனி உடைய உயர்ந்த சிகரத்தில் உற்பத்தியாகி வெள்ள அலைகடல் நோக்கிப் பாயும், பொன் கொழிக்கும் வளம் தரும் கடப்பதற்கு அரிதான கங்கையின் கரையில், போரில் தோற்ற மன்னர்கள் தப்பி ஓட, 'ஓடம் எப்போது வரும் என்று எதிர்பார்த்து வருந்திச் சோர்ந்து காத்து இருப்பது போல இவன் வீட்டு முற்றம், இவன் அன்பை எதிர்பார்த்து இவனிடம் காண வந்தவர்களின் கூட்டம் நிரம்பியதாக இருக்கும்.

<u>நீதி வழுவா நெறி முறை செல்வன்</u>

"பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்கும் ....
உரும்பு இல் சுற்றமோடு இருந்தோன் குறுகி, (436-447)

இளஞ்செழியன் அரண்மனை முற்றம் அவன் தயவை எதிர் பார்த்துக் காத்திருப்போர் கூட்டம் நிரம்பியதாக இருக்கின்றது; அவன் அரண்மனை — நீண்ட பெரிய கையுடைய யானைக்கும் பூண் செய்யும் கருநிறக் கையுடைய கொல்லர், சம்மட்டியால் இரும்பு அடிக்கக் கேட்கும் ஒலியை வெறுத்து, மேன்மாடத்திலே உள்ள புறாக்கள் பறக்கும் — திருமகள் வாழும் திருக்கோயில் போன்றதாகும்.

கீழ்க்கடலில், நீலநிறக் கடல் பரப்பில் கிழக்குத் திசையில் இருள் போக்கி ஒளி உதவும் சூரியன், எல்லார்க்கும் பொதுவாகத் தன் பொன் ஒளிக்கதிர் பரப்பி எழுந்ததைப் போல, நீதி முறை கேட்டு வந்தவர்களுக்கும், குறை கூறி, உதவி பெறவந்தவர்களுக்கும் அவரவர் வேண்டியதை, அவரவர் வேண்டிய அளவு தந்துதவி, நடுநிலை ஆய்ந்து அறிகின்ற; மயக்கமில்லாத தேர்ந்து தெளிந்த அறிவுடையோனாகி, கொடைகள் வழங்கிக் காக்கின்ற அழுக்காறு இல்லாத தன்மையமைந்த விரிந்து பரந்த மனமுடையவனை, மந்திரி பிரதானியருடனே இருந்து அரசாளுகின்ற இளஞ்செழியனை அணுகுவீராகி.

<u>பாட்டுடைத் தலைவனைப் பாடுவாய்</u>

"பொறி வரிப் புகர் முகம் தாக்கிய வயமான் ... கடனறி மாவின் கைதொழுஉப் பழிச்சி" (448-463 அடிகள்)

புள்ளிகள் வரிசையாக இருக்கும் வண்டுகள் மொய்க்க, மதநீர் ஒழுகும், புள்ளிகள் பொருந்திய மத்தகத்துடன் சேரும் யானையைத் தாக்கி அழித்த சிங்கம், அருந்து வளைந்த வரி உடைய புலிக்குட்டியைத் தாக்க விரும்புவது போல, பாடும் புலவர்க்குப் பரிசில் தரும் கடமையைச் செய்து முடித்த உடன், பகைமன்னர் காவல் மதில்களை அழித்து அவர்தம் அரசுரிமையை — மணிமுடியைக் கைக்கொண்டு, போரில் வெற்றி தவிர, வேறு எந்த பேச்சுக்கும் உடன்படாத, உலகாளும் வல்லமை உடைய வாளேந்தும் கை உடையவனே! பகை வென்று வலிமையான கை உடையவனே! வெற்றியையே உணவாகக் கொள்ளும் நெஞ்சுடை கொண்ட, மற்போரில் சிறந்த மாவன் வழித் தோன்றலே! மறவரில் வலியுடைய மறவனே! வீரருக்கு வீரனே! செல்வரில் சிறந்த செல்வனே! போரில் மேலானவனே! வெள்ளலை வீசும் கடல் பரப்பில் (கடலுக்குள் ஒளிந்த சூரனை, கந்தன் வேலெறிந்து கொன்றான்

என்பது கந்தபுராணம். 'வாரி அவளிட வேலை விட்டவில் பெருமானே' திருப்புகழ், கொடிய சூரனை வேல் வீசிக் கொன்ற, பசும் பொன் பூண் அணிந்த செல்வன், முருகனைப் பெற்ற பார்வதி தேவிக்கு; துணங்கைக் கூத்தாடும் பெரிய வயிறுடைய பேய்மகள் போற்றிய .. 'பேழ்' சொல் நினைப்பது போல (பார்வதி முக்காலும் அறிந்தவள். அவளுக்கு இன்னொருவர் என்ன புதிதாக - அவள் அறியாததைக் கூறிவிட முடியும்? முதியாள் என்பது கருத்து) இறைவ பாத, நின் கொடைத்திறம் வாழ்த்தி; உன் பெரும் புகழ் போற்றி, நானும் சில நல் மொழிகள் புகல வந்துள்ளேன்! பெருமானே! பெருமைக்குரியவனே! நீ நெடுநாள் வாழ்க - வாழ்க பல்லாண்டு என்று, இது தோளிலே தொங்கும் பெரியாழை முறைப்படி மீட்டி, இன்னிசை பாடி முறைப்படி வாழ்த்தி வணங்குவோமாக!

பொருந்து சூழப் பொலிக.

" நின் நிலை தெரியா அளவை அந்நிலை ..... நீடு இரும் பித்தை பொலியச் சூட்டி;
(464-482) வாழ்த்தி வணங்கும் போதே;
உன்னுடைய அறிவு - மேம்பாடு, தெளியவற்றை அவன் அறிய நீ வெளிக்காட்டுவதற்கு முன்பாகவே, நீ நிற்கின்ற நிலையிலே, அவன் (உன்னை) அளந்தறிந்து கொள்வான். அறிந்து கொண்டவன், இந்த நாவலம் தீவு என்றும் நல்லுலகம் தோன்றி வாழ நிலையில்லாத இந்த உலகில் அழியாது நிலைத்து நிற்பது புகழ் ஒன்றே என்பதைச் சீர் தூக்கிப் பார்த்து உணர்ந்து, உன்னைத் தன் அருகில் அழைத்து, ஈர்ப்பாசி போல அழுக்கேறி, நைந்து கிழிந்துள்ள - உன் இடுப்பில் உள்ள, கந்தல் உடையை நீக்கி, பாலாடை போல நூலால் நெய்த புது உடையை நீயும் உன் வறிய சுற்றத்தாரும் உடுக்கக் கொடுத்து; வளைந்த (நெருக்கிய) வாள் விடாமல் பிடித்திருப்பதால், காய்ப்பேறிய கையுடைய, திறமையான சமையல்காரன்; சமைத்த பல வகை இறைச்சியின் கொழுந்துண்டை, அரிந்தெடுத்து, ஈரம் போக உலர்த்தித் தூசு போக்கிப் பொறுக்கி எடுத்து, முனை முறியாத அரிசிச் சோற்றை, மிகச் சுவைதரும் கண்டசர்க்கரை மற்றும் உள்ள உயர் உண்பொருள்கள் சேர்த்து; விரும்பி உண்ணத்தக்க அளவில் அளித்து, மேலே மேற்பாதுகாத்து, வானில் நட்சத்திரம் பூத்திருப்பது

போல உயர்ந்த உண்கலங்கள் பலவற்றிலும் இட்டுப் பரப்பி, முன் வைத்து; பாசமுடைய தாய் பெற்ற பிள்ளைக்குப் பாலுடன் ஊட்டுவது போல, உங்கள் முன் அமர்ந்து, அன்புடன் பார்த்து, அளவற்ற மகிழ்ச்சியோடு, "உண்க, உண்க" என்று ஊட்டி உபசரிப்பான். பிறகு திசை காட்டும் வானில் தோன்றிய நிலவைப்போல வண்டுகள் பார்த்து ஒலி செய்யாத (இது பொன்னால் செய்த பூ ஆதலால்) நெருப்பிலே சுத்த (பொன்னை உருக்கிச் செய்ததால்) தாமரைப் பூவை (பொற்றாமரை) உங்களின் நீண்ட திரை முடியில் அழகுபெற அணிவிப்பான்.

## மயிலாடும் குயில்பாடும்

"உறழ்க் கடல் முகந்த பருவ வானத்து .... ஒளிறு இலங்கு அருவிய மலை கிழவோனே!" (483-500) மேலும்

அலை உலாவும் கடலில் நீர் முகந்த, பருவ காலத்து மழைமேகம் பகலில் மழை பொழிகின்ற போது இடையே மின்னல் தோன்றியது போல, வாரி ஒழுங்குபடுத்திய கரிய தலை முடியில் பொன்னால் செய்த பொன்னரி மாலையை விறலியர் சூடக்கொடுப்பான். குதிரை நூல் (அசுவ சாஸ்திரம்) வல்லோர் பாராட்டும் பழமையான கருங்கடலில் வெண்சங்கு தோன்றியது போன்ற - வெள்ளிய கழுத்து மயிருடைய, ஒன்றுபோலவே செயல்படும் நான்கு குதிரைகள் பூட்டிய, காற்றிலும் வேகமாகச் செல்லும் தேரைத் தருவான். அதோடு திருப்திப்படாமல், தான் போரிட்டு வென்ற களங்கள் தன்னிடம் புறமுதுகிட்டுத் தோற்றோடிய பகைவர்கள் விட்டுவிட்டுப் போன, மேடுபள்ளங்களிலும் தடுமாறாது செல்ல வல்ல ஏறுகுதிரைகளையும், அதன் சேணத்தோடே தந்து அன்றே பரிசிலையும் வழங்கி, வழியனுப்பி வைப்பான்.

இனிய தாளலயத்தோடும், இசை நயத்தோடும், பாடும் கின்னரப் பறவைகள் இருக்கும், தெய்வங்கள் வாழும் மலைச் சாரல்களில், மயில்கள் ஆட ஆரவாரிக்கும் மரங்கள் நெருங்கிய இளமரக்காட்டில், கருங்குரங்கு பாய உதிர்ந்த மலர்கள் கானமெங்கும் சிந்திக் கிடக்கும். மந்திகள் அதைத் தூறாக வாரும். மானும் புலியும் ஓரிடத்தில் உறங்கும். முன்பக்கம் வேள்விக்கான செந்தீ அணையாது காத்து வரும் முனிவர்களுக்கு, வெண் தந்தக் கொம்புடைய யானை, விறகு (சேகரித்து) கொண்டு வந்து தந்து வேள்விக்கு உதவும். இத்தகைய வளமும் வாழ்வும் பெருமையும் புகழும் உடையவன். மலைபடுகடாம் மலைநாட்டுக்கு உரிமை

உடையோன், இளந்திரையன்.

இரவு பகல் எப்போதும் தூங்காத இயல்புடையது மேகம் சூழ்ந்த ஒலி எழுப்பும் பெரிய கடல். இது இப்படி ஒலிப்பதற்குக் காரணம் திரையன் தன்னிடம் பிறந்தவன் என்ற செருக்குதான். வேறென்ன! (நீர மகளிர் மரபில் வந்தவன் இளந்திரையன்)

## பகுதி - அ

1. பெரும்பாணாற்றுப் படை குறிப்பு வரைக
2. கழங்காடும் ஆவையர் நிலையினைக் குறிப்பிடுக
3. காஞ்சி நகரின் சிறப்பு பெரும்பாணாற்றுப் படையில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

## பகுதி - ஆ

1. வில்லொடு நிற்கும் வீரர்கள் நிலையினை பெரும்பாணாற்றுப் படை வழி விளக்குக
2. வேடுவர் வாழும் கானம் பெரும்பாணாற்றுப் படையில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
3. குடில் உறையும் கோவலர் நிலையினை பெரும்பாணாற்றுப்படை வழி குறிப்பிடுக.
4. வாணிபம் சிறந்த வணிகர் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
5. பாணருக்குப் பல்சுவை விருந்து பெரும்பாணாற்றுப் படையில் எவ்வாறு வழங்கப்பட்டது?

## பகுதி - இ

1. பெரும்பாணாற்றுப் படை மூலம் நீ அறிந்த செய்திகளை விளக்கி வரைக
2. இளந்திரையனின் பண்பு நலன்கள் பெரும்பாணாற்றுப் படையில் எவ்வாறெல்லாம் சித்தரிக்கப்பட்டுள்ளது?